# வெலிகம நகர சபை
## மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 06 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 நவம்பர் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 29 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள வெலிகம நகர சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் களஞ்சியத்திலிருந்து விநியோகிக்கப்பட்ட ரூபா 1,799,695 தொகையான பொருட்களின் பெறுமதி ஆண்டின் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்காக மாகாணசபை முத்திரைக் கட்டணமாக மீளாய்வாண்டில் கிடைத்த ரூபா 2,876,640 தொகை வருமானத்திற்கு எடுக்கப்படாமல் மீளச் செலுத்த வேண்டிய முத்திரை வைப்பாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் நிதிகூற்றுக்களுடன் 101 நாட்குறிப்புப் பதிவுகள் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் பிரதான பேரேட்டில் 109 நாட்குறிப்புக்களாக இருந்ததுடன் 08 நாட்குறிப்புப் பதிவுகளில் குறிப்பிடப்படாத கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 1,248,688 ஆக இருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 16,293,463 தொகையான இருப்புக்கள் வகைப்படுத்தப்படாமல் பொதுக் களஞ்சியத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது கிடைத்த ரூபா 3,566,793 தொகையான வாடகை காசோட்டில் வரவு வைத்து வாடகைக் கட்டுப்பாட்டுக் கணக்கில் செலவு வைக்கப்படாமையின் காரணமாக அந்த அளவினால் கடன்பட்டோர் அதிகரித்திருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் சம்பளமற்ற விடுமுறைகளின் பெறுமதியான ரூபா 376,025 தொகை இறுதிக் கணக்கில் கடன்பட்டோராகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) நான்கு உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டில் அரசாங்கத்தின் பங்களிப்பாகச் செலுத்தப்பட்ட ரூபா 206,003 தொகையான ஆதனக் கடன் வட்டித்தொகை கடன்பட்டோராகக் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 தீர்க்கப்படாத கணக்குகள்

11 கணக்கு விடயங்களுக்குரிய ரூபா 88,956,593 தொகையான மீதி தீர்க்கப்படாமல் மீளாய்வாண்டின் போதும் முன்கொண்டுவரப்பட்டிருந்தது.

### 1.3.3 வங்கிக் கணக்கு

(அ) இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 387 இன் பிரகாரம் வங்கிக் கணக்குகளில் மேலதிகப்பற்றைப் பேண முடியாதிருந்த போதிலும் காசேட்டின் பிரகாரம் 04 வங்கிக் கணக்குகளில் மேலதிகப்பற்று பேணப்பட்டிருந்தது.

(ஆ) மூன்று வங்கிக் கணக்கிற்குரிய 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2010 ஆம் ஆண்டு வரை பல வருடங்களாக முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 2,795,569 பெறுமதியான வங்கித் தவறு கழிக்கப்பட்டது எனக்காண்பித்து சரிசெய்யப்படாமல் வங்கி இணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) இரண்டு வங்கிக் கணக்கிற்குரிய 2007 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 3,211,173 பெறுமதியான இனங்காணப்படாத வங்கித் தவறு கழிக்கப்பட்டது எனக்காண்பித்து சரிசெய்யப்படாமல் வங்கி இணக்கக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) நன்கு வங்கிக் கணக்குகளில் 2011 சனவரி மாதம் தொடக்கம் 2012 செப்தெம்பர் வரை வைப்புச் செய்யப்பட்ட ரூபா 1,433,967 பெறமதியான 25 காசோலைகள் தேறாதிருந்துதடன் உரிய கடன்பட்டோர் கணக்கில் சீராக்கப்படாமல் மீளாய்வாண்டின் இறுதியில் வங்கி இணக்கக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) வழங்கப்பட்டிருந்தும் கொடுப்னவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 1,881,537 பெறுமதியான 49 காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 இணக்கஞ்செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

12 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 104,660,547 ஆக இருந்ததுடன் பட்டோலைகளின் பிரகாரமும் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரமும் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 98,468,638 ஆனமையால் ரூபா 6,191,909 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

### 1.3.5 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

---

2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 01 வருட காலத்தை விஞ்சியிருந்த பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 7,068,505 ஆக இருந்ததுடன் 01 வருட காலத்தை விஞ்சியிருந்த செலுத்தவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 90,795,650 ஆக இருந்தது.

**1.3.6 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 246,879,661 கூட்டுத்தொகையான 09 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு**

**2.1 நிதிப் பெறுபேறுகள்**

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 8,799,151 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்தை விஞ்சிய மீண்டுவரும் செலவினம் ரூபா 7,362,119 ஆக இருந்தது.

**2.2 வருமான நிருவாகம்**

**2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 7,075 | 7,226 | 4,389 |
| (ii) | வாடகை | 13,440 | 11,259 | 6,127 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,005 | 804 | 336 |
| (iv) | ஏனைய வருமானம் | 60,540 | 61,745 | 85,749 |

**2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை தொடர்பான விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 50,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 3,000,000 |

சபைக்கு தென்மாகாண சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் பல வருட காலமாக உரியவாறு கிடைக்கப் பெறாமையினால் சபையின் அபிவிருத்திச் செயற்பாடுகளில் பாதிப்பினை ஏற்படுத்தியிருந்தமையினாலும் சபையினால் செய்யப்பட வேண்டிய செலவினங்களுக்காக பணம் கிடைக்கப் பெறாமையின் அடிப்படையிலும் மேலதிகப்பற்று பெறப்பட்டமையினால் மேலதிகப்பற்று வட்டி செலுத்த வேண்டியேற்பட்டது.

**2.2.3 ஆதனவரி**

**-----------------**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபை அதிகாரப் பிரதேசத்தில் நிலுவையாக இருந்த ஆதனவரியை அறவிடுவதற்காக நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (255 ஆவது அத்தியாயம்) 170 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் செயலாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும். 2012 ஆம் ஆண்டில் நிலுவையாக இருந்த ஆதனவரியை அறவிடுவதற்காக வருமானப் பரிசோதகர் கையளித்த பட்டியல்களின் பெறுமதி அவற்றிலிருந்து சேகரிக்கப்பட்ட பணம், செலுத்தப்பட்ட தரகுப் பணம் போன்ற தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபை அதிகாரப் பிரதேசத்தில் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவையாக இருந்த வரியுடன் 39 ஆதனங்களிலிருந்து நீண்டகாலமாக முன்கொண்டுவரப்பட்ட ரூபா 589,929 தொகையான நிலுவைப் பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) 2011 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதன வரித்தொகை ரூபா 2,744,779 ஆக இருந்ததுடன் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அதன் நிலுவை ரூபா 6,125,936 ஆகக் காாணப்பட்டது. நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு அதிகாரம் கையளிக்கப்பட்ட வருமானப்

பரிசோதகர் 2012 ஆம் ஆண்டில் சேகரித்த வருமானம் ரூபா 354,255 தொகையான மிகக் குறைந்த பெறுமதியாகும்.

### 2.2.4 தொலைபேசி கோபுரக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட தொலைபேசிக் கோபுரங்களிலிருந்து கட்டணம் அறவிடுவதற்காக 2012 ஏப்ரல் 20 ஆந் திகதிய 1755 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் 2012 ஆம் ஆண்டிற்காக ஒரு கோபுரத்திலிருந்து ரூபா 50,000 தொகையான கட்டணத்தை அறவிடுவதற்கு உப விதி விதிக்கப்பட்டிருந்தது.

சபையின் வருமானப் பரிசோதகரின் 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதிய எழுத்துமூல கூற்றின் பிரகாரம் வெலிகம இலங்கை வங்கியின் பின்பக்கத்தில் நிர்மாணிக்கப்பட்ட தொலைபேசிக் கோபுரம் 2012 ஆம் ஆண்டில் பாவனைக்கு எடுக்கப்பட்டிருந்ததனால் வருடத்திற்கு ரூபா 50,000 தொகை அறவிட வேண்டியிருந்த போதிலும் அத்தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

தென் மாகாண பிரதம அமைச்சு மற்றும் உள்ளூராட்சி விடயப்பொறுப்பு அமைச்சரின் 2005 ஒக்தோபர் 05 ஆந் திகதிய 1413/15 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலில் 3 ஆவது விதியின் (1)(1) ஆம் பிரிவின் பிரகாரம் உரிய மாதத்தில் நடத்தப்பட்ட சபைக் கூட்டங்கள் மற்றும் செயற்குழுக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்காத உறுப்பினர்களுக்கு படிகள் செலுத்த முடியாதிருந்த போதிலும் கூட்டங்களுக்குச் சமுகமளிக்காத 07 உறுப்பினர்களுக்காக 2012 ஆம் ஆண்டின் போது உறுப்பினர் படியாக ரூபா 68,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

மேலும் உறுப்பினர்கள் 3 ஆவது விதியின் 1(iii) ஆம் பந்தியின் பிரகாரம் வைத்தியக் காரணங்களின் அடிப்படையில் விடுமுறை பெறல் அல்லது 3(2) ஆம் பந்தியின் பிரகாரம் முறையான அங்கீகாரம் பெறாதிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

### 2.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) புதிய நகர மண்டபம் மற்றும் நகரசபை அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக 2008 ஆம் ஆண்டின் போது 9 சதவீத வட்டியின் கீழ் உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெறப்பட்ட ரூபா 29,010,467 தொகையான கடன்பணத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் கடன்தவணை 2011 இன் இரண்டாவது காலாண்டுவரை மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன் அத்திகதியில் உள்ளவாறு ரூபா 6,645,258 தொகை செலுத்தப்படாது நிலுவையாகக் காணப்பட்டது.

(ஆ) உப தலைவரை உள்ளடக்கிய 9 உறுப்பினர்கள் மற்றும் இரண்டு உத்தியோகத்தர்கள் மீளாய்வாண்டிற்குரிய சொத்துக்கள், பொறுப்புக்கள் வெளிப்படுத்துகையை 2013 ஒக்தோபர் 07 ஆந் திகதி வரையிலும் வழங்கியிருக்கவில்லை.

(இ) 1997 தொடக்கம் 2010 ஆம் ஆண்டுவரை செலுத்த வேண்டிய ரூபா 3,433,090 தொகையான கணக்காய்வுக் கட்டணம் 2013 ஆகஸ்ட் 13 ஆந் திகதி வரையிலும் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

(அ) 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை 113 ஆகவும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை 154 ஆகவும் இருந்தது.

(ஆ) 2002 சனவரி 03 ஆந் திகதிய 14 ஆம் இலக்க மற்றும் 2006 ஏப்ரல் 10 ஆந் திகதிய 28 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றுநிருபத்தின் மூலம் உள்ளூராட்சி நிறுவனங்களில் அமைய, நாட்கூலி மற்றும் ஒப்பந்த ஊழியர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் கைவிடப்பட்டிருந்த போதிலும் அந்த ஏற்பாடுகளுக்கு முரணாக 37 ஊழியர்கள் சேர்க்கப்பட்டு மீளாய்வாண்டின் போது சம்பளமாக சபை நிதியத்திலிருந்து ரூபா 4,073,442 தொகை செலுத்தப்பட்டிருந்தது. இந்த சுற்றுநிருப ஆலோசனைகளை மீறி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படுமாயின் நிறுவனத் தலைவர் அதற்காக தனிப்பட்ட பொறுப்பை ஏற்க வேண்டியிருந்தமையும் வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(உ) களஞ்சியக் கட்டுப்பாடு